தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

ரூ. 15/– | மலர் 19 - இதழ் 04 – ஆகஸ்ட் 2017 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

71வது சுதந்திர தினவிழா

நாபார்ட் வங்கி விருது

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

பெண்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று, தன்னம்பிகையுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்துடனும், துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம், தற்போது உங்களின் அயராத உழைப்பின் விளைவால், வெற்றிகள் பல பெற்று, அனைத்து தரப்பினரும் பாராட்டும் அளவிற்கு வளர்ந்துள்ளது. ஒரு செயல் வெற்றி பெற வேண்டும் என்றால், அந்த வெற்றியைப் பெறும் வரை இடைவிடாது உழைக்க வேண்டும் என்பதை உங்களின் செயல்பாடுகளின் வாயிலாக அனைவரும் அறிந்துள்ளனர். உங்களின் செயல்பாட்டிற்கு எத்தனையோ தடைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து, சிறப்பாக செயல்பட்ட தின் விளைவாக நம் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இன்று நீங்கள் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்து வருகிறீர்கள்.

சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்து செயலாற்றி, பல்வேறு விழிப்புணர்வு பெற்று, சிறப்பாக செயல்படுவதுடன், அதனை மற்றவர்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் கற்றுத்தர வேண்டும். உங்களின் கடுமையான உழைப்பு உங்கள் குடும்பத்தின் வறுமையை மட்டும் போக்கவில்லை. இந்த ஒட்டுமொத்த சமூக வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்துள்ளது. அடுப்பூதும் பெண்களால் என்ன செய்ய முடியும்? என்று பார்த்த சமூகம் இப்போது உங்களின் வளர்ச்சியைக் கண்டு, நீங்கள் அடைந்துள்ள வெற்றியைக் கண்டு வியந்து நிற்கின்றனர். இதுநாள் வரை உங்களின் திறமையை மதிக்காதவர்கள் இன்று மனதார பாராட்டைத் தெரிவிக்கின்றனர்.

சிறு துளி பெருவெள்ளம் என்பது போல், இன்றைய காலகட்டத்திற்கு சேமிப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். வெற்றி என்னும் ஓர் உயரிய இடத்தைப் பிடிப்பதற்கு, போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் விடாமுயற்சி மட்டும் இருந்தால் போதாது, பொருளாதார சேமிப்பும் அவசியம். சுய உதவிக் குழுக்களின் சகோதரிகளாகிய நீங்கள் சேமிப்பிலும் சாதனை படைத்து விட்டீர்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்கு நமது அரசு தீட்டும் திட்டங்களின் பயன்கள், அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்பதைக் கூறிக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெற்ற வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ளவும், மேலும் பல சாதனைகளைப் படைக்கவும் நீங்கள் என்றும் ஊக்கத்துடன் செயல்பட வேண்டும். உங்களின் செயல்கள் தொடர்ந்து வெற்றி பெற எனது வாழ்த்துகள்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

71 வது சுதந்திர தின விழா கொண்டாட்டம் 05

ஏழை மகளிருக்கு இலவச கால் நடைகள் வழங்குதல் 08

தினை ஆப்பம் 10

தேசிய அளவிலான சாரஸ் கண்காட்சி 23

தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான பயிற்றுனர் பயிற்சி 26

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 29

திட்ட செயலாக்க ஆலோசனைக் கூட்டம் 34

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் மூலம் பல்வேறு தொழிற்பயிற்சிகள் பெற்று, தொழில்கள் மேற்கொண்டு வெற்றிகரமாக செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் குறித்த செய்திகள் சிறப்பாக இருக்கின்றன.

திருமதி. கீதா செல்வராஜ்,
திருமகள் மகளிர் சுய உதவிக் குழு,
உடையார்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

தமிழகத்தின் கிராமங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வில் வறுமையைப் போக்கி, வளமான வாழ்க்கையை உருவாக்கித் தரும் ஊராட்சி அளவிலாக கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஒத்தத் தொழில் கூட்டமைப்புகள் ஆகியவை முன்னிற்கின்றன.

திருமதி. கோகிலா ராமு,
கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
உத்தண்டி, காஞ்சிபுரம் மாவட்டம்.

ஆரோக்கியமான நல்வாழ்விற்கு சுகாதாரமான சூழலே அவசியம் என்ற நோக்கத்துடன் திறந்தவெளி மலம் கழித்தலை தடுக்க பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து செயல்படுத்தி வரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் பாராட்டப்பட வேண்டியவை.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
உமையாள்புரம் ஊராட்சிக் கூட்டமைப்பு
தஞ்சாவூர் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகளின் விளைவாய் இன்று தமிழக கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் வளமான பாதையை நோக்கி நடைபோட்டு வருகின்றது. அது குறித்த செய்திகள் முற்றம் இதழில் சிறப்பாக வெளியிடப்படுகின்றன.

நிர்வாகிகள் / உறுப்பினர்கள்,
கடல் மீன்கள் சுய உதவிக் குழு,
மீஞ்சூர், திருவள்ளூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 19 – இதழ் 04 – ஆகஸ்ட் 2017

விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

சு. சிநேகலதா
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

பொறுப்பாசிரியர்
சு. மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

பண்பாடு வளர்க்கும் ஆசிரியர்கள்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

நமது நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததோடு, இந்த நாட்டை வளர்ந்த நாடுகளுக்கு இணையாக உருவாக்க பல தலைவர்கள் தங்களின் உயிரையும், உடைமைகளையும் தியாகம் செய்துள்ளனர். இதன் விளைவாக, இன்று சுதந்திர இந்தியா ஒரு வல்லரசு நாடாக வளர்ந்து கொண்டு வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த வளர்ச்சியை மென்மேலும் தக்க வைத்து, நாட்டு மக்களின் நலமை பாதுகாத்து, காலத்திற்கேற்பவும், எதிர்காலங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவும் சட்டங்களையும், திட்டங்களையும் இயற்றி, திறமையாக நிர்வாகம் செய்யும் அளவிற்கு, பண்பட்ட மற்றும் சுயநலமற்ற தலைவர்கள் எதிர் வரும் காலங்களுக்குத் தேவைப்படுகிறார்கள்.

இன்றைய மாணவர்கள் தான் நாளை இந்த நாட்டை தலைமை ஏற்று நடத்துபவர்கள் ஆவர். இவர்களை சிற்பிகளாக மாற்றும் பெரும் கடமையானது மற்ற யாவரையும் விட ஆசிரியர்களிடமே உள்ளது. ஆசிரியர் பணி என்பது ஒரு சமூகப் பணியாகும். சமுதாயத்திற்கு வழிகளை கற்றுத் தரும் பணியாகும். ஆசிரியர்கள் தாங்கள் அரசு ஊழியர்கள் என தங்களை நினைத்துக் கொள்ளக் கூடாது. மாறாக, அவர்கள் சமுதாயத்தின் அறிவு ஜீவிகளாக விளங்கி, சரியான வழிகாட்டிகளாகத் திகழ வேண்டியவர்கள். மாணவர்களிடையே புத்த அறிவை மட்டுமே வளர்ப்பதோடு அல்லாமல், சமூக நல பண்புகளை வளர்ப்பதிலும் சமமாக அக்கறை செலுத்த வேண்டும்.

ஒரு காலத்தில் கல்விக் கூடங்களில் நல்லொழுக்க வகுப்புகள் நடைபெற்று வந்தன. நாளடைவில் மதிப்பீட்டுக் கல்வி என மாற்றப்பட்டு நடைபெற்று வந்தது. நல்லொழுக்கக் கல்வியானது, தனி மனித ஒழுக்கத்தை வலியுறுத்தும் அறிவுரைகளாக கொடுக்கப்படுவது. ஆனால் மதிப்பீட்டு கல்வியானது சமுதாயத்தில் நிலவும் பிரச்சனைகளுக்கு, அறிவியல் ரீதியாக காரணங்களைக் கண்டறிந்து, பகுத்துப் பார்த்து தீர்வு காண்பதற்கான அறிவைக் கொடுப்பது ஆகும். இந்த மதிப்பீடுகள் இளம் உள்ளங்களில் பதிந்து, பண்பட்ட மனிதர்களாக மாணவர்களை உருவாக்கும்.

எனவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சமூகப் பண்புகளை வளர்க்கும் மதிப்பீட்டு கல்வியில் அதிகம் கவனம் செலுத்துவது அவசியமாகிறது என்பதை இம்மாதத்தில் வரும் ஆசிரியர் தின செய்தியாக வெளிப்படுத்தி, அனைத்து ஆசிரியர் பெருமக்களுக்கும் 'முற்றம்' எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

இப்படிக்கு,



(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

71வது சுதந்திர தின விழா

சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தேசியக் கொடி ஏற்றி விருதுகள் வழங்கினார்கள்

நம் நாட்டின் 71வது சுதந்திர தினவிழா நாடு முழுவதும் வெகு விமரிசையாகவும், உற்சாகமாகவும் கொண்டாடப்பட்டது. சென்னை, தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விழாப் பேருரை நிகழ்த்தினார்கள்.

சென்னை தலைமைச் செயலகம் வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, தலைமைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர் முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, திறந்த ஜீப்பில் சென்று அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து காலை 08.30 மணிக்கு கோட்டை கொத்தளத்தில் உள்ள கம்பத்தில் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்து விழாப் பேருரையாற்றினார். பின்னர் அங்கு போடப்பட்டிருந்த பந்தலில் அமர்ந்திருந்த மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை, போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக் கழக பேராசிரியர் ச. ப. தியாகராஜன் அவர்களுக்கு டாக்டர் அப்துல் கலாம் விருதுக்கான தங்கப் பதக்கம், 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழையும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி பெண்ணான செல்வி. சீ. பிரீத்திக்கு துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

தமிழக அரசுத் துறைகளில் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தியதற்கு நல் ஆளுமை விருதுகளை காவல் வீட்டு வசதி வாரியம், வேளாண்மைத் துறை இயக்குநரகம், வணிகவரிகள் துறை ஆகியவற்றுக்கு நல் ஆளுமை விருதுகளும், தமிழகத்தில் கல்லீரல் சிகிக்சைப் பிரிவை அமைத்த சென்னை மருத்துவக் கல்லூரியின் கல்லீரல் துறைத் தலைவர் டாக்டர் கே. நாராயணசாமி, மரங்களை வளர்க்கும் போது அதன் வேர்களுக்கே நேரடியாக தண்ணீரைச் செலுத்தும் வகையிலான புதிய நடைமுறையைக் கண்டுபிடித்ததற்காக வருவாய் நிர்வாக ஆணையாளர் கொ. சத்யகோபால் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பணியாற்றி வரும் காஞ்சிபுரம் கண் அறுவை சிகிச்சை மருத்துவர் வீ. ம. சங்கரனுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்து சிறந்த மருத்துவருக்கான விருதும், மதுரை க்யூர் அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மைய நிறுவனம் திரு. வெ. பெ. இளையபாரிக்கு சிறந்த சமூகப் பணியாளர் விருதும், மெடிந்தியா அறக்கட்டளைக்கு சிறந்த தொண்டு நிறுவனத்துக்கான விருதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனமாக திருச்சி ஆர்பிட் நிறுவனத்திற்கும், சிறப்பாக செயல்படும் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும், பெண்கள் நலனில் சிறந்து விளங்கி தொண்டாற்றும் நிறுவனமான நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள் நலச் சங்கத்திற்கும் விருது வழங்கப்பட்டது. திருமதி. கிருஷ்ணம்மாள் ஜெகநாதனுக்கு சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது வழங்கப்பட்டது.

சிறந்த மாநகராட்சியாக திருநெல்வேலி மாநகராட்சியும், சிறந்த நகராட்சிகளாக சத்தியமங்கலம், பூந்தமல்லி மற்றும் திருமங்கலம் ஆகிய நகராட்சிகளும், சிறந்த பேரூராட்சிகளாக பொன்னம்பட்டி, இருகூர் மற்றும் நம்பியூர் ஆகிய பேரூராட்சிகளும் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

'நோ ஃபுட் வேஸ்ட்' என்ற லாப நோக்கமில்லாத அமைப்பையும், எதுதர்மா என்ற இணைய வழி உதவித் தொகைத் திட்டத்தையும் செயல்படுத்தி வரும் கோவை மாவட்டம் ஆ. கோ. பத்மநாபன், பெண்களை ஆபத்தான பட்டாசுத் தொழிலில் இருந்து மீட்டு தொழில் முனைவோராக மாற்றி வரும் விருதுநகர் மாவட்டம் கோ. உமையலிங்கம், சீமை கருவேல மரங்கள் ஒழிப்பு, தூய்மைப் பணிகள் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வரும் திருநெல்வேலி மாவட்டம், உ. ஸ்ரீபதி தங்கம் ஆகியோருக்கு இளைஞர் விருதுகள் வழங்கப்பட்டன.

தலைமைச் செயலக கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், தூதரக அதிகாரிகள், அரசு உயர் அலுவலர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ■

சுதந்திர தின விழா கொண்டாட்டம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக நம் நாட்டின் 71 வது சுதந்திர தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத் அவர்கள், திருமதி. சு. சிநேகலதா அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

நாபார்ட் வங்கி விருது

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி பராமரித்து திறம்பட செயல் புரியவும், அரசின் உதவிகள் மற்றும் வங்கிக் கடன் இணைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, குழு உறுப்பினர்கள் வறுமையிலிருந்து மீளவும், மகளிர் எல்லா துறைகளிலும் திறம்பட செயல் புரியவும் மற்றும் முழு அதிகாரத்துடன் சிறந்து விளங்கச் செய்வதில் (Women Empowerment) மற்ற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, நாபார்டு வங்கியின் சென்னை மண்டலம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு, 'மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி சிறப்பாக செயல்படுத்தும்' நிறுவனங்களில் முதல் நிறுவனமாக அறிவித்து, அதற்கான சிறந்த விருதை, 26.07.2017 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் மூலம் வழங்கி கௌரவித்தது.

கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களும் இணைந்து விருதினைப் பெற்றுக் கொண்டனர். ■

ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு இலவச கால்நடைகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தமிழக அரசின் சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் ஏழை மகளிர் குடும்பத் தலைவிகளுக்கு பல்வேறு சுய வேலை வாய்ப்புப் பயிற்சிகள், தொழிற்பயிற்சிகள் உள்ளிட்ட வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அந்த வகையில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிர மணிய சுவாமி திருக்கோவிலுக்கு பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய கால்நடைகள் அக்குடும்ப உறுப்பினர்களுக்கு பெற்றுத் தரப்பட்டன.

கால்நடைகளை பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கும் நிகழ்ச்சி கோவில் கோசாலையில் நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கோவில் இணை ஆணையர் திரு. வரதராசன் அவர்கள் 20 பயனாளிகளுக்கு கன்றுடன் கூடிய பசுக்களை இலவசமாக வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் ஊரக வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர்கள், களப் பணியாளர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களின் புதிய தொழில்கள் துவக்கம்

தூத்துக்குடி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தவும், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கிடவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக ஸ்ரீ வைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தில், அகரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் அகரம் பாதசாரிகள் பூங்காவில் உணவகம், திருப்புளிங்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் தையல் அலகு, பத்மநாபமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் தையல் விரிவாக்க அலகு, அப்பன்கோவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் ஊராட்சி ஒன்றியத்தில் உணவகம் மற்றும் சிறுதொண்ட நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நகலகம் (ஜெராக்ஸ்) போன்ற தொழில்கள் துவங்கப்பட்டன.

அகரம் பாதசாரிகள் பூங்காவில் 03.08.2017 அன்று மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் புதிய தொழில் களைத் துவக்கி வைத்து, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் 9 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக தலா ரூ. 10,000/- வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள், திரு. ரிச்சர்டு வில்சன், திரு. சிவக் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. மாணிக்கவாசகம், திரு. முத்துக்குமார் மற்றும் அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக மாற்றுத் திட்ட அலுவலர்களுக்கான மருத்துவ முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக மாற்றுத் திட்ட அலுவலர்களுக்கான மருத்துவ முகாம் 07.08.2017 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன் (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) அவர்கள், திரு. எஸ். அண்ணாமலை பிரேம்குமார் (வாழ்வாதாரம்) அவர்கள், திருமதி. சி. சுஜாதா ஜேக்கப் (திறன் வளர்ப்பு) அவர்கள் மற்றும் தமிழ்நாடு ஊரக மாற்றுத் திட்டத்தின் அலுவலர்கள் இம்மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.

இம்மருத்துவ முகாமில் சென்னை அப்பல்லோ மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் மற்றும் பல்வேறு நிபுணர்கள், முகாமில் பங்கேற்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, உயரம், எடை, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், ஹீமோகுளோபின், கொழுப்புச் சத்து, இரத்த சோகை, நரம்புக் கோளாறுகள், மகப்பேறு, இதயக்கோளாறுகள் போன்றவை குறித்து பரிசோதனை மேற்கொண்டனர்.

இம்மருத்துவ முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மாநில அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், (TNVRC) சென்னை மேற்கொண்டது. ■

தேவையான பொருட்கள்

தினை – 2 கப், இட்லி அரிசி – கால் கப், வெள்ளை உளுந்து – 2 டேபிள் ஸ்பூன், வெந்தயம் – 1 ஸ்பூன், தேங்காய்ப்பூ – 1/2 கப், வடித்த சாதம் – ஒரு கைப்பிடி, உப்பு – தேவையான அளவு, சர்க்கரை – 2 ஸ்பூன்,

கஞ்சி காய்ச்ச – பச்சரிசி 2 ஸ்பூன் (தனியே ஊற வைக்கவும்)

செய்முறை

தேவையான பொருட்களை தயாராக வைக்கவும் முதலில் தினையுடன் இட்லி அரிசி, உளுந்து, வெந்தயம் சேர்த்து, 4 மணி நேரம் ஊற வைக்கவும். ஊறியதும் அத்துடன் தேங்காய் மற்றும் வடித்த சாதம் சேர்த்து நைசாக அரைக்கவும்.

தனியே ஊற வைத்த பச்சரிசியை மிக்ஸியின் சிறிய ஜாரில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அரைக்கவும். அத்துடன் தண்ணீர் சேர்த்து மோர் பதத்திற்குக் கரைத்து, ஒரு பாத்திரத்தில் ஊற்றி குறைந்த தீயில் வைத்து, கைவிடாமல் கிளறவும். (கிளறுவதை நிறுத்தி விட்டால் கட்டி தட்ட ஆம்பிக்கும்)

சிறிது நேரத்தில் சூடேறியதும் மாவு பசை போன்ற பதத்திற்கு இறுகத் தொடங்கும். அப்போது அடுப்பிலிருந்து பாத்திரத்தை எடுத்து விடவும். சூடு தணிந்ததும் ஏற்கனவே அரைத்து வைத்துள்ள ஆப்ப மாவுடன் கலந்து விடவும். பின்னர் உப்பு சேர்த்து மீண்டும் ஒருமுறை நன்கு கலக்கி மாவை புளிக்க விடவும்.

மறுநாள் மாவு புளித்து நன்கு பொங்கியிருக்கும். மாவுடன் 2 ஸ்பூன் சர்க்கரை சேர்த்து தளர்வாக கலக்கவும். தேவையான மாவை ஆப்ப சட்டியில் ஊற்றி, மூடி வைத்து வேக வைக்கவும். ஓரங்களில் முறுகலாகவும், நடுவில் மெத்தென்ற பஞ்சு போன்றும் சுட்டு எடுக்கவும். சத்தும், சுவையும் மிகுந்த இந்த தினை ஆப்பத்தை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

கஞ்சி காய்ச்சி சேர்ப்பதினால் ஆப்பம் சோடா உப்பு சேர்க்காமலே சாப்டாக வரும்.

சோடா சேர்க்காததால் ஆப்பம் வேக கொஞ்சம் நேரம் எடுக்கவும்.

சர்க்கரை சேர்ப்பதால் ஆப்பத்தின் ஓரம் பழுப்பு நிறத்தில் மாறுவதுடன் கிரிஸ்ப்பியாகவும் இருக்கும். ■

இதயக் கோளாறுகளை நீக்கும் வெள்ளைப் பூண்டு

பழங்காலம் முதல் சமையலில் முக்கிய இடம் பெற்று வரும் வெள்ளைப் பூண்டுக்கு மருத்துவ குணம் அதிகம் உண்டு. பக்கவாதம், வயிற்று வலி போன்றவற்றுக்கு பூண்டு சிறப்பான மருந்தாகும். மார்புச் சளியைக் கரைப்ப தோடு, கபத்தை இளக்கி தூக்கத்தை தரக் கூடியது. செரிமானத்தையும் சீர்படுத்தக் கூடியது.

சளித் தொல்லை உள்ளவர்கள் 10, 15 பூண்டுப் பற்களை உரித்து, 50 மில்லி பாலுடன் அதே அளவு தண்ணீர் சேர்த்து, நன்றாக வேகவைத்து, பாதியாக வற்றியதும் ஒரு சிட்டிகை மஞ்சள் தூள், மிளகுப் பொடி சேர்த்து அடுப்பில் இருந்து இறக்கி நன்றாகக் கடைய வேண்டும். பிறகு தேவையான அளவு பனங் கற்கண்டு சேர்த்து இரவு தூங்கப் போவதற்கு முன் அருந்தினால், மூக்கடைப்பு, மார்புச் சளி, கபம் போன்றவை குணமாகும்.

வாய்வுக் கோளாறினால் சிலருக்கு முதுகுப் பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, கை கால் வீக்கம் போன்றவை ஏற்படக் கூடும். அப்போது வெள்ளைப் பூண்டை நெருப்பில் சுட்டு தோலை உரித்து சாப்பிட்டு வந்தால் மேற்கண்ட பிரச்சனைகள் தீரும். பூண்டினை ரசம், குழம்பு போன்றவை வைத்து சாப்பிடலாம்.
இதயக் கோளாறு, இரத்த அழுத்தம் உள்ளவர்களும், இரத்தக் குழாயில் கொழுப்பு படிந்திருப்பவர்களும் வெள்ளைப் பூண்டினை வேக வைத்து சாப்பிடுவதால் நாளடைவில் நோய்கள் கட்டுக்குள் வரும். ■

பயனுள்ள குறிப்புகள்

துளசி இலை போடப்பட்ட நீரை தினமும் குடித்து வந்தால், தொண்டைப் புண் ஏற்படாது.

காலை உணவிற்கு முன் தினமும் ஒரு தக்காளி சாப்பிட்டு வந்தால், 3–4 மாதங்களில் உடல் எடை குறையும்.

கடுமையான இருமல் இருந்தால், 3 கப் தண்ணீருடன் வெற்றிலையையும் மிளகையும் போட்டு கொதிக்க வைத்து குடித்து வரவும்.

பல் வலி வந்தால், துளசி இலை 2, கொஞ்சம் உப்பு மற்றும் மிளகுத் தூள் ஆகியவற்றை வலி இருக்கும் இடத்தில் வைத்து அழுத்தினால், பல் வலி குறையும்.

கேரட் மற்றும் தக்காளி சாறுடன் சிறிது தேனைக் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் அவர்களின் உடல் வலிமை பெறும். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 29.07.2017 அன்று பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாத் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

புதுடெல்லியில் மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் தோமர் அவர்களை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், 24.07.2017 அன்று நேரில் சந்தித்து, ஊரக குடிநீர்த் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊரக குடிநீர்த் திட்டப்பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யவும், ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ், புதிய திட்டங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார். இந்த சந்திப்பின் போது, மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை இணை அமைச்சர் திரு. ராவ் இந்திரஜித் சிங் அவர்கள் உடனிருந்தார். மேலும் நகராட்சி நிருவாக ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், மற்றும் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உறைவிட ஆணையர் – 2, திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ■

செவ்வந்தி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி

தஞ்சாவூர் மாவட்டம், சக்கர சாமந்தம் கிராமத்தில், 2015ஆம் ஆண்டு செவ்வந்தி மகளிர் சுய உதவிக் குழு துவங்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி, தவறாமல் சேமித்து வந்தனர். இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களில் 10 பேர் இலக்கு மக்கள். இந்தப் பகுதியில் விவசாயம்தான் முக்கியத் தொழிலாகும். இவர்கள் அனைவரும் விவசாய கூலி வேலைக்குச் சென்று, அதன் மூலம் கிடைக்கும் குறைந்த வருவாயில் தங்களின் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் இக்குழுவின் உறுப்பினர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட சமுதாய முதலீட்டு நிதி ரூ. 70,000/-க் கொண்டு, சிறிய அளவில் மளிகைக் கடை ஒன்றினைத் துவக்கலாம் எனத் திட்டமிட்டனர். அதன்படி தஞ்சாவூரில் இருந்து மளிகைப் பொருட்களை மொத்தக் கொள்முதல் செய்யலாம் என்றும், உள்ளூரிலேயே குழுவின் உறுப்பினர் ஒருவரின் வீட்டின் முன்புறம் தடுப்பு அமைத்து மளிகைக் கடை வைக்கலாம் என்றும் தீர்மானிக்கப் பட்டு, அதன்படி ரூ. 13,000/- செலவு செய்து மளிகைக் கடையினை துவக்கினர். மளிகைக் கடைக்குத் தேவையான குளிர்சாதனப் பெட்டி ரூ. 14,000/- மதிப்பில் வாங்கப்பட்டது.

பின்னர் உறுப்பினர்கள் தங்களின் பங்களிப்பாக ரூ. 30,000/- செலுத்தி, மொத்தம் ரூ. 70,000/- மதிப்பில் மளிகைக் கடைக்குத் தேவையான பொருட்களை கொள்முதல் செய்தனர். இந்த மளிகைக் கடையில் குழுவின் உறுப்பினர்கள் சுழற்சி முறையில் வேலை செய்கின்றனர். மாதம் ரூ. 20,000/- வரை நிகர இலாபமாகக் கிடைக்கிறது.

போதுமான வருவாய் இன்றி வறுமையில் வாழ்ந்து வந்த செவ்வந்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தற்போது மளிகைக் கடை மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். தங்களிக் வாழ்வாதாரத்தை உயர்த்தி ய வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர். ■

மாவட்ட அளவிலான பயிற்சிப் பட்டறை

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரவக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மாவட்ட அளவிலான உதவித் திட்ட அலுவலர் மற்றும் தொகுப்பு களப் பணியாளர்களுக்கு பரிவர்த்தனை அடிப்படையிலான சுய உதவிக் குழுக்களின் கணக்கியல் குறித்த பயிற்சிப் பட்டறை 28.07.2017 மற்றும் 29.07.2017 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க கூட்ட அரங்கில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள் இந்தக் கருத்துப் பட்டறையினை துவக்கி வைத்து, சுய உதவிக் குழுக்கள் சமுதய அடிப்படையிலான அமைப்புகளின் பரிவர்த்தனை விபரங்கள் உட்பட அனைத்து சாராம்சங்களில் Data Base தளத்தை உருவாக்க வேண்டியதின் முக்கியத்து-வம் குறித்து விளக்கிப் பேசினார்.

உதவித் திட்ட அலுவலர் திரு. இ. ஜான் லிங்டன் அவர்கள் சுய உதவிக் குழுக்கள் குறித்த விபரங்களை கணினி முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முக்கியத்துவம் குறித்தும், உதவித் திட்ட அலுவலர் திரு. ஜ. ஜெயக்குமார் அவர்கள் கணக்குப் பரிவர்த்தனை கையாளுதல் குறித்து நடைமுறை தொடர்புடைய பயிற்சிகளை வழங்கியதோடு, இந்த அமைப்பு முறையை செயல்படுத்துவதற்கான பல்வேறு குறிப்புகள் மற்றும் விளக்கங்களையும் எடுத்துரைத்தார்.

இந்தக் கருத்துப் பட்டறையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் தின் உதவித் திட்ட அலுவலர்கள், தொகுப்பு களப்பகுதி அலுவலர்கள், கணினி இயக்குபவர்கள் உட்பட கலந்து கொண்டனர். ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் மாத இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நிர்ணயித்த இலக்கை எய்தி முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாவட்டங்கள்

1) **நாகப்பட்டினம் மாவட்டம்**
2) **தஞ்சாவூர் மாவட்டம்**
3) **திருச்சிராப்பள்ளி மாவட்டம்**
4) **தூத்துக்குடி மாவட்டம்**
5) **சேலம் மாவட்டம்**

இந்த மாவட்டங்களுக்கு முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஒத்தத் தொழில் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

தினம்... தினம்...

ஆசிரியர் தினம் (செப்டம்பர் 05)

மனிதனை மனிதனாக உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர் சமுதாயத்தை சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப்படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது. தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்லமனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. ஆசிரியர்கள் என்றால் மாணவ சமுதாயத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள்.

ஆசிரியராக இருந்து நம் நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்த பாரத ரத்னா டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமே ஆசிரியர் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

பிற பணிகளில் இல்லாத சிறப்பு ஆசிரியர் பணியில் இருக்கிறது. மாதா, பிதா குரு தெய்வம் என்று தான் சொல்கிறோம். மாதா, பிதா, டாக்டர், இன்ஜினியர் என்று நாம் சொல்வது இல்லை. தமிழ் சிறப்பாயிரம் பாடலில் சொன்னது போல் அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்குத் தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியர் உலகத்தையே குழந்தைகளுக்குத் தருகிறார். இத்தகு சிறப்பு மிகுந்த ஆசிரியர் பெருமக்களைப் போற்றி புகழ்ந்திட இந்நாளில் உறுதியேற்போம். ■

சர்வதேச எழுத்தறிவு நாள் (செப்டம்பர் 08)

யுனெஸ்கோ என்று பொதுவாக அழைக்கப்படும் ஐ.நா. கல்வி அறிவியல் கலாச்சார நிறுவனம், எழுத்தறிவின்மையை அகற்றும் பொருட்டு 1965ம் ஆண்டு செப்டம்பர் 8ம் நாள் ஈரான் நாட்டின் தலைநகர் டெக்ரானில் உலக நாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடு ஒன்றை நடத்தியது. எழுத்தறி வின்மையால் உலக நாடுகளில் ஏற்படும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கப்பட்ட இம்மாநாட்டில், எழுத்தறிவின் மையை உலகிலிருந்து அறவே நீக்குவதற்காக ஆற்ற வேண்டிய பணிகள், நடைமுறைகள் ஆகியவைகளை பட்டியலிட்டு ஒரு அறிக்கை வெளியிடப் பட்டது. எழுத்தறிவின்மையை போக்குவதற்கான மாநாடு நடைபெற்ற செப்டம்பர் 8ம் தேதியை 'சர்வதேச எழுத்தறிவு நாள்' என யுனெஸ்கோவின் 14வது பொதுக்குழு பிரகடனம் செய்தது. அதன்படி 1967ம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8ம் நாள் சர்வதேச எழுத்தறிவு நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ■

உலக அமைதி நாள் (செப்டம்பர் 21)

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் பிரகடனத்தின்படி ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 21ம் தேதியை உலக அமைதி நாளாக ஐக்கிய நாடுகளின் சபை உறுப்பு நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 1981ஆம் ஆண்டு முதல் உலக அமைதி நாள் செப்டம்பர் மாதம் மூன்றாவது செவ்வாய்க்கிழமை அன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்த உலக அமைதி நாள், 2002ஆம் ஆண்டிலிருந்து செப்டம்பர் 21ஆம் தேதி அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. அமைதி என்பதற்குப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. தற்காலத்தில் அமைதி என்பது பகை இல்லாத நிலையைக் குறிக்கிறது. சர்வதேச அளவில் போர் இல்லாத நிலையை யும் குறிக்கிறது. அனைத்து பிரச்சனைகளுக்கும் அமைதியே மருந்து. மேலும் உலகின் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது சமாதானம். உலக சமாதான முயற்சி ஒன்றின் போது ஐ.நா.வின் பொதுச்செயலாளர் ஹாமர்சீல்ட் விமான விபத்தில் உயிர் துறந்தார். இந்த துயர சம்பவம் நிகழ்ந்தது 1961ம் ஆண்டு செப்டம்பர் மூன்றாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமை. ஆகையால் இந்த தினமே உலக அமைதி தினமாக அனுசரிக்கப்படுகிறது. ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

களப்பணியின் குரல்கள்

திருநெல்வேலி மாவட்டம் கடயநல்லூர் வட்டம், கொடிகுறிச்சி சிராம பஞ்சாயத்தில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலை குறித்தும் மற்றும் தனி நபர் இல்லக் கழிப்பறை பயன்பாட்டின் முக்கியத்துவத்தை குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 06.06.2017 அன்று வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை வட்டம், மஞ்சக்குழி கிராம பஞ்சாயத்தில் உள்ளவர்களுக்கு திறந்தவெளி மலம் கழித்ததலற்ற நிலையை உருவாக்கிட கிராம வரைபடம் முன்னின்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். நாள் 29.06.2017

தூத்துக்குடி மாவட்டம் கயத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் திறந்த வெளிமலம் கழித்தலற்ற நிலையை உருவாக்கிட தேர்வு செய்யப்பட்ட ஊக்குநர்களுக்கு உறைவிடப் பயிற்சியை கயத்தார் YCMA பயிற்சி நிறுவனத்தில் திட்ட இயக்குநர் தலைமையில் 08.06.2017 அன்று வழங்கப்பட்டது.

களப்பணியின் குரல்கள்

வட்டார வளர்ச்சி அலுவலர், பயிற்சி அளிக்கப்பட்ட
ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள்
ஒருங்கிணைந்து பள்ளி மாணவர்களுக்கு சுகாதார
விழிப்புணர்வு நிகழ்ச்சி வழங்கப்பட்டது.
நாள் 28.06.2017 இடம் சிவகங்கை மாவட்டம்,
திருப்பத்தூர் வட்டார ஒன்றியம்.

பள்ளி மாணவர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு
மற்றும் திறந்தவெளி மலம் கழித்ததலற்ற நிலை குறித்த
விழிப்புணர்வு வழங்கப்பட்டு பின் உறுதிமொழி எடுத்துக்
கொண்டனர். நாள் 30.06.2017
இடம்: கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை வட்டம்

பெரம்பலூர் ஊராட்சி மக்களுக்கு பெரம்பலூர் ஊராட்சி மன்ற
அலுவலகத்தில் கிராம வரைபடம் மூலம் சுகாதாரம் குறித்த
திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்கிட
(இரண்டு நாள்) புத்தாக்கப் பயிற்சி மாவட்ட ஆட்சியர்
தலைமையில் 27.06.2017 மற்றும் 28.06.2017 அன்று
வழங்கப்பட்டது. இடம்: பெரம்பலூர் மாவட்டம்

தனிநபர் இல்லக் கழிப்பறையின் முக்கியத்தையும் மற்றும்
அதன் பயன்பாட்டின் அவசியத்தையும் பயனாளிகளுக்கு
கொண்டு செல்லும் வகையில் ஊக்குவிப்பாளர்களுக்கு
பயிற்சி சேகரிப்பாளரின் தலைமையில் ஆட்சியர்
அலுவலகத்தில் 21.06.2017 அன்று அளிக்கப்பட்டது.
இடம் : நீலகிரி மாவட்டம்.

தனிநபர் இல்லக்கழிப்பறையின் பயன்பாட்டினை உயர்த்தும்
வகையிலும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு
உணர்த்தும் வகையில் ஊக்குவிப்பாளர்களுக்கு பயிற்சி
திருமதி. மல்லிகா, நீலகிரி மாவட்டம் அவர்களின் தலைமையில்
20.06.2017 அன்று வழங்கப்பட்டது.

சுகாதாரம் குறித்த சமூக அணுகுமுறைகள் மற்றும் திறந்த
வெளிமலம் கழித்ததலற்ற நிலையை அடைந்திடவும் காஞ்சிபுர
மாவட்ட ஆட்சியர் அவர்கள் 19.06.2017 அன்று நடத்தப்பட்ட
பயற்சியில் ஆய்வு மேற்கொண்டார்.
இடம்: காஞ்சிபுரம் மாவட்டம்.

உருஞ்சிக் குழியிலிருந்து உரம் எடுத்தல்

மதுரை

காஞ்சிபுரம்

திருவாரூர்


உறுதி மொழி
ஒரு காலை நேரம் பூஞ்சோலை கிராமத்தில் வந்து இறங்கினார் அருணா.
பூஞ்சோலை
ஹலோ தம்பி... உன் பேர் என்ன?
கணேசன்... என்ன வேணும்?
கணேசா... என் பேர் அருணா. இந்த ஊர் பஞ்சாயத்து ஆபீஸுக்கு எப்படிப் போகணும்?
வாங்க காட்டறேன்.
ஆமா... இங்க என்ன பண்றே?
வெ...வெளிய போகலாம்னு வந்தேன்.
ஏன்... இங்க கழிப்பறை எல்லாம் கிடையாதா?
இருக்குக்கா... அது ரொம்ப போர். ப்ரீயா இருக்காது.
என்ன படிக்கிறே?
ஏழாங் கிளாஸ்.
படிக்கிற பையன் யோசிக்க வேண்டாமா?
பேசிக்கொண்டே பஞ்சாயத்து அலுவலகம் வந்தார்கள்
இனிமே கழிப்பறையைத்தான் பயன்படுத்தணும். சரியா?
சரிங்கக்கா!
காலைக் கடன்களை முடித்துவிட்டு பள்ளிக்குக் கிளம்பினான் கணேசன்.
அங்கே...
கவனமா கேளுங்க... சாப்பிடறதுக்கு முன்னும் பின்னும் கைகளை சுத்தமா சோப்பு போட்டு கழுவணும்.


எல்லா வகுப்பு மாணவர்களையுமே பார்த்தார் அருணா.
கழிப்பறையை பயன்படுத்தாம திறந்தவெளியில மலம் கழிச்சா...
... வாந்தி பேதி, வயிற்றுப்போக்கு...
... காலரா போன்ற நோய்கள் வரும்.
முக்கியமா கிராமப்புற மக்கள்கிட்ட இது பற்றிய விழிப்புணர்ச்சி வரணும்.
பெண்கள் காட்டுப்பக்கம் செல்வதால் தேவையற்ற விபத்துகளும், சங்கடங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.
சுகாதார மையம்
அருணா அக்கா, கிராமப்புற மக்களிடையே சுகாதாரம் மற்றும் கழிப்பறை குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் ஊக்குநர் என்பதை அறிந்தான் கனேசன்.
மாலையில் மாணவர்களுடன் கலந்துரையாடலும் இருந்தது.
கழிப்பறைப் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து பேசிய அருணா, அது தொடர்பான மாணவர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளித்தார்.
திறந்தவெளியில் மலம் கழிப்பதைத் தவிர்த்து, கழிப்பறையைப் பயன்படுத்த உறுதி ஏற்போம்.
என்ன கணேசா.. புரிஞ்சுகிட்டியா?
புரிஞ்சதுக்கா... இனி கழிப்பறையைத்தான் பயன்படுத்துவேன். இதை என் நண்பர்களுக்கும் சொல்வேன்
நாங்களும்தான்.
இது உறுதி!

திறந்த வெளியில் மலம் கழிப்பதிலிருந்து சுதந்திரம் : 9 – 15, ஆகஸ்ட் 2017 விழிப்புணர்வு கொண்டாட்டங்கள்

அரியலூர்

கடலூர்

தருமபுரி

காஞ்சிபுரம்

கிருஷ்ணகிரி

மதுரை

திறந்த வெளியில் மலம் கழிப்பதிலிருந்து சுதந்திரம் : 9 – 15, ஆகஸ்ட் 2017 விழிப்புணர்வு கொண்டாட்டங்கள்

நாகப்பட்டினம்

நீலகிரி

பெரம்பலூர்

இராமநாதபுரம்

சிவகங்கை

தேனி

திறந்த வெளியில் மலம் கழிப்பதிலிருந்து சுதந்திரம் : 9 – 15, ஆகஸ்ட் 2017 விழிப்புணர்வு கொண்டாட்டங்கள்

திருவாரூர்

தூத்துக்குடி

திருநெல்வேலி

திருவள்ளூர்

திருவண்ணாமலை

திருச்சிராப்பள்ளி

தேசிய அளவிலான சாரஸ் கண்காட்சி

தேசிய அளவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கைவினைஞர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி செய்யும் வகையிலும் தேசிய அளவில் நடத்தப்படும் சாராஸ் கண்காட்சி வேலூர் மாவட்டத்தில் முதல் முறையாக 09.08.2017 முதல் 20.08.2017 வரை வேலூர் கோட்டை அருகில் உள்ள பெரியார் பூங்காவில் நடைபெற்றது. இக்கண்காட்சியினை 09.08.2017 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் 150 அரங்குகள் அமைக்கப்பட்டு, அதில் இந்தியாவில் உள்ள 17 மாநிலங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தன. சாராஸ் கண்காட்சியில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் தனித்துவம் பெற்ற பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைப்பதால், இக்கண்காட்சி வாடிக்கையாளரிடையே வரவேற்பு பெற்றுள்ளது. குளிர்கால ஆடைகள், ஆயத்த ஆடைகள் மற்றும் மரப் பொம்மைகள், உலர் திராட்சைப் பழங்கள், மைசூர் சில்க் புடவைகள், கலம்காரி புடவைகள், அகர்பத்திகள் மற்றும் வாசனைப் பொருட்கள், பருத்திப் புடவைகள் மற்றும் ஊறுகாய், பஞ்சாப் மாநில தோல் பொருட்கள், மூங்கில் பொருட்கள், ஆபரணங்கள், மதிப்புக் கூட்டுப் பொருட்கள், செயற்கை அலங்காரப் பூக்கள், கைத்தறி ஆடைகள், பளிங்கினால் செய்யப்பட்ட ஆபரணங்கள் போன்ற பொருட்கள் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன

பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பெரியார் பூங்காவில் நடைபெற்ற கண்காட்சியில் தினசரி சிறப்பு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. வேலூர் மாவட்ட மக்களின் மனதிற்கு ஏற்ப இக்கண்காட்சி அமைந்திருந்ததால், மகளிர் சுய உதவிப் பொருட்களின் விற்பனையும் சிறப்பாக இருந்தது. ■

தையல் இயந்திரம் வழங்குதல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் சமூக நலத்துறை ஆகியவை இணைந்து, குடும்பத் தலைவிகளுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி 17.07.2017 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்படி மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் கண்ணுடையான்பட்டி, சமுத்திரம், சித்தாநத்தம், மொண்டிப்பட்டி மற்றும் புத்தாநத்தம் ஆகிய கிராமங்களில் செயல்படும் மகளிர் குழுக்களைச் சேர்ந்த குடும்பத் தலைவிகளுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தையல் இயந்திரங்களை வழங்கினார். இந்நிகழ்வின் போது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தேசிய ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், 15.07.2017 நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் முதன்மை மாநாட்டு கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் முனைவர் சீ. சுரேஷ் குமார், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய நகராட்சிகளிலும், தலைஞாயிறு, வேளாங்கண்ணி, கீழ்வேளூர், திட்டச்சேரி, குத்தாலம், தரங்கம்பாடி, மணல்மேடு, வைத்தீஸ்வரன் கோவில் ஆகிய ஊராட்சிப் பகுதிகளிலும் புதியதாகத் துவக்கப்பட்டுள்ள 101 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக தலா ரூ. 10,000/– வீதம் ரூ. 10,10,000/– வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் மற்றும் உதவித் திட்ட அலுவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கல்லூரிச் சந்தை

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை கல்லூரி மாணவ மாணவியரிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன. அதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் தந்தை ஹேன்ஸ் ரோவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12.07.2017 முதல் 14.07.2017 வரை நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. தி. ஸ்ரீதர் அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு அவர்கள், மக்கள் தொடர்பு அலுவலர் திரு. க. பாவேந்தன் அவர்கள், தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு. கே. வரதராஜன் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திருமதி. எஸ். மணிமேகலை, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் திரு. இரா. சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றின் சார்பில், படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரும் வகையில் வேலைவாய்ப்பு முகாம் 22.07.2017 அன்று நடைபெற்றது.

இம்முகாமில் 1800 இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் தனியார் நிறுவனங்களில் பணியாற்ற வாய்ப்புப் பெற்ற 486 இளைஞர்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் பணி ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திரு வண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்களின் பரிவர்த்தனை அடிப்படையிலான எண்ணியல் கணக்கு முறை பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பெண்களின் சமூக, பொருளாதார சுய சார்பை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையாக சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட பதிவேடுகள் பராமரிப்பு முக்கியத்துவம் வகிக்கிறது.

சுய உதவிக் குழுக்களின் தொடர்ந்த சிறப்பான செயல்பாட்டிற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சுய உதவிக் குழுக்களின் பரிவர்த்தனை அடிப்படையிலான எண்ணியல் கணக்கு முறை (Transaction Based SHGs Digital Accounting System–TBSDAS) செயல்பாட்டினை செயல்படுத்தவுள்ளது. இதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் 20.07.2017 அன்று நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்ட தொகுதி வழிநடத்துநர்களுக்கான மாவட்ட அளவிலான இரண்டு நாள் பயிற்சியினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் டாக்டர். சு. சுரேஷ் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்கள்.

இப்பயிற்சியில் உதவி திட்ட அலுவலர் திருமதி. எம். கலைச்செல்வி, சுய உதவிக் குழுக்களின் பரிவர்த்தனை அடிப்படையிலான எண்ணியல் கணக்குகளை இணைய தளத்தில் பதிவு செய்வது குறித்து விரிவாக பயிற்சி அளித்தார்.

உதவித் திட்ட அலுவலர்கள் திரு. எம். அறுமுகம், திரு. ப. அந்தோணி சிலுவை, திருமதி. எம். கலைச்செல்வி, திரு. எம். கே. பிச்சையப்பா மற்றும் தொகுதி வழிநடத்துநர்கள் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டார்கள். ■

கல்லூரிச் சந்தை

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை கல்லூரி மாணவ மாணவியரிடையே பிரபலப்படுத்தும் வகையில் கல்லூரிச் சந்தைகள் நடத்தப் படுகின்றன. அதன் தொடர்ச்சியாக தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரியில் 17.07.2017 முதல் 19.07.2017 வரை நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வின் போது தஞ்சை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. கு. இந்துபாலா அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் DSMS மேலாளர் உட்பட பலர் உடனிருந்தனர்.

இந்த கல்லூரிச் சந்தையில், தஞ்சாவூர், சென்னை, கடலூர், திருச்சி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், ஈரோடு, காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த, கைவினைப் பொருட்கள், உணவுப் பொருட்கள், பொம்மைகள், பட்டு மற்றும் கைத்தறி துணிகள், மரப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், மரப் பொருட்கள், சிற்பங்கள், கடற்சிப்பிகள், பல்வேறு உலோகங்களில் செய்யப்பட்ட சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள், சணல் மற்றும் வாழை நார் பொருட்கள் மற்றும் மணி மாலைகள் போன்ற பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. ■

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும், அமெரிக்கத் தூதரகமும் இணைந்து நடத்திய மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான பயிற்றுனர் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சார்பாக தொழில் முனையும் மகளிர் மேம்பாடு அடைவதற்காக ஒருநாள் பயிற்சி 11.08.2017 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியினை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். முன்னதாக வருகை தந்த அனைவரையும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) திரு. பா. செல்வராஜன் அவர்கள் வரவேற்றார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அமெரிக்க தூதரகத்தின் பொது தூதர் திரு. இராபர்ட் பர்கெஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், திருமதி. டாக்டர் சௌந்தர்யா ராஜேஷ் (ஹியூமன் கேப்பிடல் அமைப்பு) அவர்கள், திருமதி. உமா ரெட்டி (நிர்வாக இயக்குநர், இ மெர்ஜ்) ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இப்பயிற்சியில் திருவள்ளூர், கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், விழுப்புரம், திருச்சி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, கடலூர், தேனி, சென்னை, வேலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே தொழில் முனையும் 47 மகளிர்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வாழ்வாதாரப் பிரிவு கலந்து கொள்ள ஏற்பாடு செய்திருந்தது.

இப்பயிற்சியில் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், அவர்களுக்கான வாய்ப்புகள், தொழில் முனைதலில் மகளிரின் பங்கு, பாலின சமத்துவம், மகளிருக்கான அரசின் கொள்கைகள் மற்றும் விதிகள், தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களும், அவற்றின் பயன்களும், தொழில் முனைவதின் மூலமாக வருமானத்தை அதிகரிக்கும் யுக்திகள், தேசிய மற்றும் வெளிநாடுகளின் சந்தைகளை அணுகுதல், தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாக சந்தைகளை அறிந்து கொண்டு தொழில்களை மேம்பாடு அடையச் செய்தல் மற்றும் இணையதளம் மூலமாக தொழில்களை மேம்பாடு அடையச் செய்யும் முறைகள் குறித்து இ மெர்ஜ் நிர்வாக இயக்குநர் திருமதி. உமா ரெட்டி அவர்களும், தலைவர் திருமதி. இரா. ராஜலெட்சுமி அவர்களும் பயிற்சி அளித்தார்கள்.

இவ்விழாவின் நிறைவாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இணை இயக்குநர் (திறன் மற்றும் வேலைவாய்ப்பு) திரு. சி. கே. வீரணன் அவர்கள் நன்றியுரை கூற பயிற்சி இனிதே நிறைவு பெற்றது.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும், அமெரிக்கத் தூதரகத்தின் கலாச்சார விவகார நிபுணர் திருமதி. உஷா பி. தேவலூர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) / செயலாளர், TNVRC திருமதி. கா. சுஜாதா ஜேக்கப் அவர்கள் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) ஒருங்கிணைத்தது. ■

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

நாமக்கல் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆசியா மரியம், இ.அ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் முதற்கட்டமாக திருச்செங்கோடு வட்டாரம், வரகூரம்பட்டி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், அப்பகுதி சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களைப் பார்வையிட்டு, அவைகளை சந்தைப்படுத்திட உரிய ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் கிராம வளர்ச்சி நிதியில் இருந்து 15 உறுப்பினர்களுக்கு ரூ. 1,50,000/- தொழில் கடன் வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆய்வின் இரண்டாம் கட்டமாக பள்ளிப்பாளையம் அக்ரஹாரம் பகுதியில் (Waste Cloth) கந்தைத் துணிகளை மறுசுழற்சி செய்யும் மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பார்வையிட்டு, அவைகளின் உறுப்பினர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர் பாதரை ஊராட்சியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், அப்பகுதியில் செயல்படும் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை குறித்த விரங்களைக் கேட்டதுடன் குழுவினர் பராமரித்து வரும் பதிவேடுகளையும் ஆய்வு செய்தார். பின்னர் 3 நபர்களுக்கு ரூ. 30,000/- தொழில் கடனும், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ. 1,60,000/-மும் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் உட்பட பலர் உடனிருந்தனர். ■

இயக்க செயல்பாட்டு விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் புதிய இந்தியாவிற்கான இயக்கம் 2017-2022 இயக்க செயல்பாட்டு விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி 12.08.2017 அன்று மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்புரை நடைபெற்றது.

திட்ட இயக்குநர் அவர்கள் கொடியசைத்து விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார். இதில் உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள், சமுதாய அமைப்பாளர்கள், சமூக வள நபர்கள், நகர அளவிலான கூட்டமைப்பு குழுக்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள தொழில் முனைவோர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

நமது மகளிர் பண்டைய காலந்தொட்டு தங்களது கைவண்ணத்தில் பல்வேறு பொருட்களை செய்து வருகின்றனர். பெண்களின் கைப்பக்குவத்தில் உருவாக்கப்படும் உணவுப் பொருட்கள், தின்பண்டங்கள், ஊறுகாய் வகைகள், வத்தல், வடகம் போன்ற பொருட்கள் தனித்தன்மை வாய்ந்தவை.

மேலும் தங்கள் பாரம்பரிய தொழில் பொருட்களான சுடுமண் பொருட்கள், கைத்தறி ஆடைகள், பட்டுப் புடவைகள் மட்டுமின்றி, தற்கால தேவைக்கேற்ப சணல் (Jute) பொருட்கள், நவநாகரீக ஆபரணங்கள், பொம்மைகள், மூலிகைப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், அலங்கார மலர்கள் போன்று எண்ணிலடங்கா பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர்.

இதுபோன்று பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்தாலும், இவற்றைத் தொடர்ந்து இலாபகரமாக செய்வதில் முக்கிய பிரச்சினைகளான சரியான மூலப் பொருட்களை கொள்முதல் செய்தல், அதி நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துதல், அதற்கான பயிற்சிகள் போன்றவை மட்டுமின்றி, அவர்களது உற்பத்திப் பொருளை விற்பனை செய்வதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி பெரும்பாலானோர் அத்தொழிலையே கைவிட்டு விடுகின்றனர்.

எனவே, மகளிர் தொழில் முனைவோரை மேற்கண்ட இன்னல்களிலிருந்து விடுவிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள விருப்பமுள்ள தொழில் செய்யும் மகளிர் தங்களை மகளிர் திட்ட மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தில் பதிவு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பதிவு செய்தவர்களில் தகுதியானவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுவதுடன், அவர்களது தொழிலை சிறப்பாக நடத்திடத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும். அதாவது தொழில் குறித்த பயிற்சி, மூலப் பொருட்களை கொள்முதல் செய்தல், இயந்திரங்களைப் பயன்படுத்துதல், வங்கிகள் மூலம் கடன் இணைப்பு, உற்பத்தி பொருளுக்கு விலை நிர்ணயம் செய்தல் மட்டுமின்றி விற்பனைக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

எனவே முற்றம் வாசகரான நீங்களும், உங்களுக்குத் தெரிந்த சுய உதவிக் குழுக்களில் உள்ள தொழில் செய்யும் மகளிருக்கு இந்த விபரத்தைத் தெரியப்படுத்துவதுடன், உங்கள் பகுதி PLF செயலாளர், களப்பகுதி அலுவலர் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர், மகளிர் திட்டத்தினை அணுகி, இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, வாழ்வில் வளம் பெற அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,
மேலாண்மை இயக்குநர் / தலைவர்,
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

மேலும் விபரங்களுக்கு 044-28171705, 9176234089, 9080017380 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்.

மாடித் தோட்ட உபகரணங்கள் வழங்கும் விழா

வேலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கூட்டாண்மை முறையில் தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து, வேலூர் மாநகராட்சியைச் சேர்ந்த 28 பயனாளிகளுக்கு, மாடித் தோட்டம் அமைக்கத் தேவையான உபகரணங்களை மானிய விலையில், வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்களின் முன்னிலையில், வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. ஆ. இராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. எல். ராஜா,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

நலத்திட்ட தகுதி வழிகாட்டி செயலி அறிமுகம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கடற்கரை பகுதி வாழ் மக்கள் தங்கள் தகுதிகளை அறிந்து திட்டப் பலன்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட வழிகாட்டி செயலி சோதனை அடிப்படையில் HESPL நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் செயல்படுத்துவதற்கு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 08.08.2017 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், HESPL நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி திரு. அனிகேட் டோகர் அவர்கள் மற்றும் செல்வி லட்சுமி ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கைப்பேசி செயலியை பயன்படுத்தி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் அந்தந்த ஊராட்சிகளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் குடும்ப வாரியான விவரங்கள், கைப்பேசியில் உள்ளீடு செய்தால், அந்த குடும்ப உறுப்பினர்களின் தகுதிக்கேற்ப மத்திய / மாநில அரசுகளின் திட்டங்கள், பிற தனியார் அளிக்கும் திட்டங்கள் போன்றவற்றை தானாகவே காண்பித்து, அத் திட்டத்திற்கான விண்ணப்ப படிவம் மற்றும் அதனை எவ்வாறு பூர்த்தி செய்தல் போன்ற விவரங்கள் அடங்கிய விபரங்கள் கைப்பேசி செயலி மூலம் கிடைக்கும். இதன் மூலம் ஒவ்வொரு கிராம மக்களும், தமது தகுதிக்கேற்ப உள்ள பல்வேறு நலத் திட்டத்தின் பலன்கள் குறித்து அறிந்து கொண்டு, அவைகளை பெறுவதற்கு உரிய விண்ணப்ப படிவம் அனுப்பி நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ■

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுப் பணிகள்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், இத்திட்டத்தின் கீழ் செயல்படும் பல்வேறு அங்கத்தினர்களுடன் திட்டச் செயலாக்கம் குறித்து கலந்துரையாடல் மேற்கொள்வதற்கும் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் இந்திய அலுவலர் திரு. வின்சன்ட் டார்லங் அவர்கள் மற்றும் திருமதி. கிரிஜா சீனிவாசன் ஆகியோரால் 17.07.2017 முதல் 21.07.2017 வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் நாபின்ஸ், பல்லவன் கிராம வங்கி, ஐசிஐசிஐ வங்கி ஆகியவற்றின் மேலாளர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், காப்பீடு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மீனவர் சங்க பிரதிநிதிகள், Tally நிறுவன பிரதிநிதிகள், Xlog நிறுவனத்தினர் மற்றும் மாவட்டச் செயலாக்க அலுவலர், இரண்டாம் நிலை அலுவலர்கள், மாவட்ட ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த ஆய்வின் போது, இத்திட்டம் செயல்படுத்தப்படும் கூடுதல் மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 20 மீனவ விற்பனை மையங்கள் நாகை மாவட்ட மீனவ சங்கங்களின் கூட்டமைப்பு மூலம் அமைக்க வேண்டும் எனவும், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 30 மீனவ விற்பனை சங்கங்கள், கன்னியாகுமரி மாவட்ட மீனவ சங்கங்களின் கூட்டமைப்பு SIFFS மூலம் வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. ■

காப்பீடு செயலாக்கம் குறித்து புது யுக்திக்கான கலந்தாய்வுப் பட்டறை – ஒரு புதிய முயற்சி

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ஆறு கடற்கரையோர மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 2017–18ஆம் ஆண்டிற்கான காப்பீடு செயலாக்கம் குறித்து புது யுக்திக்கான ஒருங்கிணைந்த கருத்துப் பட்டறை திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களின் தலைமையில் ஜுலை – ஆகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்டது.

இக்கருத்துப் பட்டறையில் அனைத்து மாவட்டங்களின் மாவட்ட செயலாக்க அலுவலர்கள், மீன்வளத்துறை உதவி இயக்குநர், மாவட்ட மீனவ முன்னேற்ற சங்க சம்மேளனத்தின் முதன்மை நிர்வாகிகள், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மேலாளர்கள், ஆயுள் காப்பீடு நிறுவனத்தின் மேலாளர்கள், நியூ இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மேலாளர், கூட்டு வள மைய பணியாளர்கள், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் நிர்வாகிகள், காப்பீடு தோழிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்துப் பட்டறையினை கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் துவக்கி வைத்து, காப்பீட்டின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். வருங்காலங்களில் பல்வேறு காப்பீடு பாலிசிகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு காப்பீடு தோழிகள் மூலம் இலக்கை அடைய தீவிர முனைப்புடன் செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் சேர்க்கப்பட்ட காப்பீடு பாலிசிகளில், கிடைக்கப் பெறாமல் இருந்த பாலிசிகள் நிறுவனத்தினரால் நேரடியாக வழங்கப்பட்டது. காப்பீடு நிறுவனத்தில் இருந்த வரப்பெற்ற அலுவலர்கள், தங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் காப்பீடு திட்டம் குறித்து மக்களுக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

கிராமப்புறங்களில் காப்பீடு செயலாக்கம் ஏற்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து காப்பீட்டுத் தோழிகளிடம் விவரங்கள் கேட்டறிந்து தக்க ஆலோசனை வழங்கப்பட்டது. காப்பீடு அதிக எண்ணிக்கையில் செய்த காப்பீட்டுத் தோழிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு காப்பீடு பாலிசி வாரியாக பரிசுகள் வழங்கப்பட்டு, இக்கருத்துப்பட்டறை நிறைவு பெற்றது. ■

சமையலறை தோட்டம் / மாடி காய்கறித் தோட்டப் பயனாளிகளுக்கு விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 2017–18ஆம் ஆண்டுக்கான சமையலறை காய்கறி தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் அமைப்பது தொடர்பான பயிற்சி திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேற்படி பயிற்சியில் திட்ட மேலாண்மை அலகின் நிறுவன வளர்ச்சி மேலாளர், அனைத்து மாவட்ட செயலாக்க அலுவலர்கள், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர்கள், ஊராட்சி ஒன்றிய தோட்டக்கலை அலுவலர்கள், வள ஆதார மைய பணியாளர்கள், ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

தோட்டக்கலை சார்பில் சமையலறை காய்கறித் தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் அமைப்பது பற்றி காணொலி காட்சி மூலம் விளக்கமளிக்கப்பட்டது. பின்னர் செடிகள் வளர்ப்பது தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

கூடுதல் இயக்குநர் மற்றும் நிறுவன வளர்ச்சி மேலாளரால் பயனாளிகளுக்கு சமையலறை காய்கறித் தோட்டம் மற்றும் மாடித் தோட்டத்திற்கான விதைகள் மற்றும் அவை தொடர்பான உபகரணங்கள் வழங்கப்பட்டன. பயனாளியின் தோட்டத்திற்கு சென்று காய்கறித் தோட்டம் அமைப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி வழங்கப்பட்டது. ■

வாழ்வாதார நடவடிக்கைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

2017–18ஆம் ஆண்டின் வாழ்வாதார நடவடிக்கைகளின் முதல் காலாண்டின் சாதனைகள், இரண்டாவது காலாண்டின் செயல் திட்டம் குறித்து ஆய்வு மேற் கொள்ளும் பொருட்டு, அனைத்து ஆலோசகர்கள், இளம் தொழில் வல்லுநர்கள், நிறுவன வளர்ச்சி அலுவலர்கள், மாநில மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வியாபார ஊக்குநர்கள் மற்றும் கூடுதல் வியாபார ஊக்குநர்களுக்கு ஒரு நாள் ஆய்வுக் கூட்டம் 26.07.2017 அன்று முதன்மை செயலர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் திட்ட மேலாண்மை அலகில் நடைபெற்றது.

இதில் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், நிதி மற்றும் மதிப்பீட்டு மேலாளர், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர், மண்டல மேலாளர், நாபின்ஸ் மற்றும் பல்லவன் கிராம வங்கி, மண்டல தலைமை அதிகாரி மற்றும் முதுநிலை மேலாளர், இந்தியன் வங்கி அவர்களும் கலந்து கொண்டனர். கூடுதல் இயக்குநர் அவர்களால் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் முதல் காலாண்டில் அடைந்த சாதனை மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் கடன் திருப்பத் தொகை, சுய உதவிக் குழுக்களுக்கான நுண்கடன் மற்றும் தரகு விவரங்கள் ஆகியவை பற்றி மாவட்டம் மற்றும் கூட்டு வள மைய வாரியாக ஆய்வு செய்யப்பட்டது. முதல் காலாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிக கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ரூ. 145 இலட்சம் கடன் தொகை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதற்காக விழுப்புரம் மாவட்டத்திற்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. மேலும் 15.08.2017 சுதந்திர தினம் மற்றும் 15.09.2017 அறிஞர் அண்ணா பிறந்த நாளன்று திட்ட மாவட்டங்களில் பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடன் வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மாவட்ட வாரியாக முதல் காலாண்டின் சாதனைகள் பற்றி விளக்கக் காட்சி மூலம் விவரிக்கப்பட்டது. திட்ட மாவட்டங்களில் திட்ட நடவடிக்கைகளின் மீது இளம் தொழில் வல்லுநர்கள் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கை பற்றி ஒவ்வொருவரும் விளக்கக் காட்சி மூலம் விவரித்தனர். ■

பொம்மையார்பாளையம் மாதிரி கூட்டமைப்பு கள ஆய்வுப் பணி

விழுப்புரம் மாவட்டம், பொம்மையார்பாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை மாதிரி ஊராட்சி கூட்டமைப்பாகத் தேர்வு செய்ததின் அடிப்படையில், அதற்கான ஆய்வு கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் 05.08.2017 அன்று நடத்தப்பட்டது. பொம்மையார்பாளையம் ஊராட்சியில் உள்ள சுய உதவிக் குழுக்களில் செயல்பாட்டில் உள்ளவை, செயல்படாதவை, குழு கலைந்து சென்றவை, புதுப்பித்தக் குழு என பிரிக்கப்பட்டு, செயல்படாத குழுக்களை செயல்பட செய்வதற்கான கலந்தரையாடல் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும் இக்கூட்டத்தில் செண்டுமல்லி குழு மற்றும் இமயம் குழு என்ற குழுக்களுக்கு மொத்தம் ரூ. 11,80,000/– குழு கடனாக கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் அனுமந்தை கிளை பல்லவன் கிராம வங்கி மேலாளர் ஆகியோரால் வழங்கப்பட்டது.

கூட்டுப்பொறுப்புக்குழுவில் உள்ள மகளிர்களுக்கு உணவு, பாரம்பரிய உணவுகள், பால் மற்றும் பால் சார்ந்த பொருட்கள் விற்பனை கடை செயல்பாடுகளை புதிதாக கொண்டு வருவதற்கான கலந்தாய்வு நடைபெற்றது. வருமானம் ஈட்டும் தொழில் மூலம் தையல் பயிற்சி மற்றும் எம்பிராய்டிங் பயிற்சி அளிக்கப்பட்டு, கடன் வழங்க திட்டமிடப்பட்டது.

மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள் போன்றோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் காரணமாக வருவாய் ஈட்டும் தொழில் கடன் வழங்க தெரிவிக்கப்பட்டது. சமையலறை தோட்டத்திற்கான விதை மற்றும் உரங்களை செயல் விளக்கப் பயிற்சியுடன், மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. மகளிர் வாழ்க்கைத் திறனை மேம்படுத்தும் பயிற்சியின் பயிற்சியாளராக சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர். ■

திருவாரூர் மாவட்டம், தொண்டியக்காடு ஊராட்சியில் 02.08.2017 அன்று நடைபெற்ற அரையாண்டு திட்டமிடல் ஆய்வுக் கூட்டம்

திருவாரூர் மாவட்டம், தொண்டியக்காடு ஊராட்சியில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வாயிலாக செயல்பட்டு வரும் தொண்டியக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் 2017–18ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு திட்டமிடல் ஆய்வுக் கூட்டம் 02.08.2017 அன்று நடத்தப்பட்டது. காலை கோலப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. பின்னர் மருத்து அலுவலர் தலைமை யிலான குழுவின் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டதுடன், டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வும், நிலவேம்பு சாறும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

மாவட்டச் செயலாக்க அலுவலர், அரையாண்டு திட்டமிடல் ஆய்வுக் கூட்டம் நடத்துவதின் நோக்கம், திட்ட செயல்பாடு, இலக்கு மக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தேவைப்படும் வசதிகள் குறித்து தெளிவாக எடுத்துக் கூறியதுடன், வருங்கால வாழ்வாதாரத்திற்குத் தேவையான திட்டங்களை உருவாக்கிட தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கிற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள், புதிதாக தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்கள், வங்கியாளர்கள், மீன்வளத்துறை, வேளாண்துறை, சட்டத்துறை, தொண்டு நிறுவனங்கள், இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர், தோட்டக்கலை உதவி அலுவலர், பேரிடர் மேலாண்மை திட்ட அலுவலர் மற்றும் மருத்துவ அலுவலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

இறுதியாக போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதுடன், ஆய்வுக் கூட்டம் சிறப்பாக நிறைவு பெற்றது. ■

கோகுல் ஐஸ்கிரீம் மற்றும் ஐஸ் கட்டி தயாரிப்பு கூட்டுப் பொறுப்புக் குழு

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், சதுரங்கப்பட்டிணம் ஊராட்சியில் 03.03.2017 அன்று ஹமித் ஆண்டவர் குழுவைச் சேர்ந்த திருமதி. மலர்விழி, திருமதி. ரகமத்பீவி, திருமதி. லட்சுமி, திருமதி. டெல்பின் மேரி, திருமதி. தாகிராபீவி ஆகியோர் கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து, கோகுல் ஐஸ்கிரீம் மற்றம் ஐஸ் கட்டி தயாரிப்பு தொழிலை ஆரம்பித்தனர். மொத்த நிதியாக ரூ. 2,50,000/–ம், பல்லவன் கிராம வங்கியில் நிதியாக 12% வட்டியில் ரூ. 2,37,500/–ம், உறுப்பினர்களின் பங்களிப்பாக ரூ. 12,500/–ம் சேர்த்து தொழில் தொடங்கினர்.

இது குறித்து கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, ‘இத்தொழிலில் எங்களுக்கு போதிய அனுபவம் இருந்தும், நிதி ஆதாரம் இல்லாமை யால் தொழில் நலிவடைந்தது. பொதுக்குழுக் கூட்டத்தில் கூட்டுப் பொறுப்புக்குழு பற்றி பேசப்பட்டது. இதன் மூலம் நாங்கள் இணைந்து கடன் தொகை பெற்று, நல்ல முறையில் தொழிலை நடத்தி வருகிறோம். எங்கள் ஊராட்சிக்கு அருகில் கல்பாக்கம் அணுமின் நிலைய குடியிருப்பு உள்ளதால் நாங்கள் தயாரிக்கும் ஐஸ்கிரீம், கோன் ஐஸ், கப் ஐஸ் போன்றவை நல்ல முறையில் விற்பனை ஆகின்றன. அருகில் உள்ள கிராமங்களில் இருந்து வியாபாரிகள் இரு சக்கர வண்டிகளில் வாங்கிச் சென்று விற்பனை செய்கிறார்கள். எங்களிடம் ஐஸ் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் ஐஸ் உடைத்து தரும் இயந்திரம் ஆகியவை உள்ளதால், எங்களிடம் ஐஸ் கட்டிகள் பெற்று மீன்களைப் பதப்படுத்துகின்றனர். அருகில் உள்ள கிராமங்களில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளுக்கும் ஐஸ்கிரீம் சப்ளை செய்கிறோம்.

சென்ற மாதம் வரை அசல் மற்றும் வட்டித் தொகை ரூ. 45,000/–த்தை பல்லவன் கிராம வங்கியில் திருப்பி செலுத்தியுள்ளோம். கடன் திருப்பம் போக இலாபமாக ரூ. 23,200/– கிடைத்தது. நாங்கள் சுயமாக தரமான பொருட்களை விற்பனை செய்ய உதவி செய்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்’ என்று கூறுகின்றனர். ■

திருவள்ளூர் மாவட்டத்தில் புதிய மீன் வலைப்பின்னும் கூடம் பயன்பாட்டிற்கு ஒப்படைத்தல்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சின்ன மாங்கோடு மற்றும் பசியாவரம் கிராமங்களில் புதிய வடிவமைப்புடன் 2016–17ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட மீன் வலைப்பின்னும் கூடத்தை மீனவர்களின் பயன்பாட்டிற்காக, திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் ஒப்படைக்கப்பட்டு, இக்கூடத்தை பயன்படுத்துதல் மற்றும் பராமரிப்பு குறித்து மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. ■

கிரீன் துடைப்பம் தயாரிக்கும் கூட்டுப் பொறுப்புக் குழுவின் வெற்றிக் கதை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு, திருமதி. கிளாரா, திருமதி. ஜெயகுமாரி, திருமதி. பேபி, திருமதி. கணேஸ்வரி, திருமதி. சசிகலா ஆகிய 5 பேரும் இணைந்து, கூட்டுத் தொழிலாக துடைப்பம் தயாரித்தல் தொழிலை செய்ய தீர்மானித்து, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வாயிலாக நாபின்ஸ் கடன் ரூ. 1,75,000/– சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் ரூ. 62,500/– என மொத்தம் ரூ. 2,50,000/–த்தை முதலீடாகக் கொண்டு, கிரீன் துடைப்பம் தயாரிக்கும் கூட்டுப் பொறுப்புக் குழுவை துவக்கினர்.

இது குறித்து கூட்டுப் பொறுப்புக் குழுவினர் கூறும்போது, ‘கடன் பெறும் முன்பு நாங்கள் பிற முதலாளிகளிடம் கூலிக்கு இத்தொழிலை செய்து வந்ததால், சிறிய அளவில் மட்டுமே எங்களுக்கு வருவாய் கிடைத்தது. தற்போது மொத்த வியாபாரிகளிடம் விற்பதாலும், ஓலைகள் வாங்குவதற்கு மொத்தமாக தென்னை மரங்களை மொத்தமாக குத்தகைக்கு வாங்கி செய்வதால், வண்டி வாடகை போன்ற தேவையற்ற செலவுகளை குறைத்து, நல்ல இலாபம் பெற்று வருகிறோம். இலாபம் முழுவதும் எங்களுக்கே கிடைப்பதால் எங்களது குடும்ப வருமானம் உயர்ந்துள்ளது. இந்தத் தொழிலின் மூலம் ரூ. 56,686/– இலாபம் பெற்றுள்ளோம். ரூ. 75,220/– கடன் திருப்பம் செலுத்தியுள்ளோம். எங்களது வளர்ச்சிக்கு உதவி புரிந்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்’ என்றனர். ■

காப்பீடு இழப்பீட்டுத் தொகை பெற்ற நபரின் அனுபவம் ஒரு நல்ல பாடம்

கடலூர் மாவட்டத்தில், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் 26 ஊராட்சிகளைச் சேர்ந்த காப்பீடு தோழிகள் மற்றும் கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான ஒருங்கிணைந்த காப்பீடு செயலாக்கம் குறித்த கருத்துப் பட்டறை சென்னை, திட்ட மேலாண்மை அலகின் நிறுவன வளர்ச்சி மேலாளர் அவர்களின் தலைமையில் 01.08.2017 அன்று ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தக் கருத்துப் பட்டறையில் மதலப்பட்டு வள ஆதார மையத்தைச் சேர்ந்த நாணமேடு ஊராட்சியில் கோகுலட்சுமி மற்றும் மதலப்பட்டு ஊராட்சியில் மங்கவரம் ஆகிய பயனாளிகளின் கறவை மாடுகள் இறந்ததில், காப்பீடு இழப்பீடு தொகையாக நபர் ஒருவருக்கு தலா ரூ. 24,000/– வழங்கப்பட்டது. இழப்பீடு பெற்ற பயனாளிகள் கூறுகையில், ‘இந்த இழப்பீடு தொகை வழங்கியதால், வங்கிக் கடனை திரும்ப செலுத்த எங்களுக்கு உதவியாக இருந்தது. காப்பீடு செய்யாமல் இருந்திருந்தால், எங்களுடைய வாழ்வாதாரம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும். எங்களுக்கு காப்பீட்டை அறிமுகப்படுத்திய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்’ என்று கூறினார்கள். ■

மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்ட செயலாக்க ஆலோசனைக் கூட்டம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் திட்டச் செயல்பாடுகளை ஆய்வு மேற்கொள்ள மாவட்ட அளவிலான திட்ட செயலாக்க ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மகளிர் திட்ட அலுவலர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கால்நடைத்துறை உதவி இயக்குநர், மீன்வளத்துறை சார் ஆய்வாளர், கூட்டுறவுத் துறை துணைப்பதிவாளர், மாவட்ட தொழில் மைய மேலாளர், நாபின்ஸ் நிறுவன பிரதிநிதி, மாவட்டச் செயலாக்க அலுவலர் மற்றும் மாவட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அடிப்படை புள்ளிவிவர கணக்கெடுப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மறுசீரமைப்பு செய்தல், சுய உதவிக் குழு உறுப்பினர்களை கூட்டுப் பொறுப்புக் குழுவாக உருவாக்குதல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் அரையாண்டு திட்டமிடல் கருத்தரங்கு நடத்துதல், ஊராட்சிக்குத் தேவையான சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டிடம், மீன் விலைப்பின்னும் கூடம், மீன் உலர்களம் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களை பிற திட்டங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை பார்வையிடுவதற்கு சமுதாய பட்டறிவுப் பயணம் அழைத்துச் செல்லுதல் போன்ற செயல்பாடுகளின் தற்போதைய நிலை மற்றும் செலவின விவரம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. ■

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல் – ஒரு புதிய தொடக்கம்

தூத்துக்குடி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் இயங்கி வந்த 20 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத் தின் கீழ், மறுசீரமைப்பு செய்ய மாவட்ட செயலாக்க அலுவலர் திரு. எஸ். உலகநாதன் அவர்கள் தலைமையில், விளாத்திக்குளம் வட்டாரம், பெரியசாமிபுரம் ஊராட்சியில் உள்ள குஞ்சாபுரம், முத்துச்சாமிபுரம் ஆகிய குக்கிராமங்களில் இயங்கி வந்த சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, குக்கிராம அளவில் (HLF) கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

குக்கிராம அளவில் தேர்வு செய்யப்பட்ட ஆறு உறுப்பினர்களுடன் நான்கு நேரடி நியமன உறுப்பினர்கள் மற்றும் ஒரு மாற்றுத் திறனாளி உறுப்பினர் தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு தலைவர், செயலர், இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இந்தக் கூட்டமைப்பினை கண்காணிப்பதற்காகவும், மக்களுக்கும், அரசுக்கும் இணைப்புப் பாலமாக செயல்படும் வகையில், 1. குழு அமைப்பு மற்றும் வலிமைப்படுத்துதல் துணைக் குழு, 2. கடன் கண்காணிக்கும் துணைக்குழு, 3. வாழ்வாதாரத் துணைக்குழு, 4. சமூகப் பிரச்சனைகளுக்கான துணைக்குழு மற்றும் 5. சமூக தணிக்கைக் குழு ஆகிய ஐந்து துணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ■

திட்டத்தின் செயல்பாடுகளை ஆன்லைனில் கைப்பேசி செயலி மூலம் உள்ளீடு செய்வது தொடர்பாக ஒரு நாள் பயிற்சி

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை கைப்பேசி செயலி மூலம் உள்ளீடு செய்து, அனைத்து தகவல்களையும் இணையதளம் மூலம் தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து உடனடியாக தெரிந்து கொள்வதற்காக செயலி உருவாக்கப்பட்டது. இது குறித்து மத்திய திட்ட மேலாண்மை அலகின் மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஒருநாள் செயல்முறையுடன் கூடிய பயிற்சி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 02.08.2017 அன்று நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் காஞ்சிபுரம் மாவட்ட இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் கூட்டு வள மைய பணியாளர்கள் கலந்துக் கொண்டனர். அனைத்து படிவங்களிலும் விபரங்கள் எவ்வாறு உள்ளீடு செய்வது என்பதை செயல்முறையுடன் செய்து காண்பிக்கப்பட்டது. இக்கைப்பேசி செயலியில் உள்ளீடு செய்யும் போது ஏற்படும் சந்தேகங்கள், விவரங்கள் கேட்டுக் கொண்டதுடன், ஏற்கனவே உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளில் பிழை இருப்பின் அதனை சரி செய்து நிவர்த்தி செய்யப்பட்டது. ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 3rd Floor, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034 (65,000 Copies circulated) an Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079. Editor : S. CHINNAPPAN.

மாநில வங்கியாளர்கள் கூட்டமைப்பின் சிறப்புக் கூட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெள்ளி விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து வங்கியாளர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வங்கியாளர்களின் கூட்டமைப்பின் (SLBC) சிறப்புக் கூட்டம், 27.07.2017 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

கூடுதல் தலைமைச் செயலர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் மற்றும் மாநில வங்கியாளர்கள் கூட்டமைப்பின் வழிநடத்துநர் திரு. எம். எம். சாரங்கி அவர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுமார் 26 வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில், விரைவில் நடைபெற உள்ள 'மகளிர் சுய உதவிக் குழு வெள்ளி விழாவை' சிறப்பாக நடத்துவது குறித்தும், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு குறித்தும் பல்வேறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. ■

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

குடற்புழு பாதிப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

1. குடற்புழு தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர் திறந்த வெளியில் மலம் கழிக்கும் போது புழுக்களின் முட்டைகள் மண்ணில் கலந்து வளர்கின்றன.

3. முட்டைகள் மற்றும் சிறு புழுக்கள் குடலில் வளர்ச்சி பெற்று முதிர்ந்த புழுக்களாகி உடல்நலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.



2. அசுத்தமான கைகள், சுகாதாரமற்ற உணவுகள் உட்கொள்ளுதல், தோலின் வழியாக புழுக்கள் உடலினுள் உட்செல்கிறது.

குடற்புழுவினால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகள்

- இரத்த சோகை
- ஊட்டச் சத்துக் குறைப்பாடு
- சோர்வு மற்றும் சுகவீனம்
- வயிற்றுப் போக்கு
- உடல் வளர்ச்சிக் குறைபாடு
- அறிவாற்றல் குறைபாடு

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!